040

ஸ்ரீ மருந்தீஸ்வரர் துதி

சிவகேங்கைஜமீன் திரு அரசுமானேரி நகரத்தில் சஞ்சீவி
வரையின்கண் திருக்கோயில்கொண்டெழுந்தருளிய

ஸ்ரீ மருந்தீஸ்வரர்
பதிகம்.

மஹர்வரப்ரசாதராகிய
முனியப்பசாமி ஆனந்தக்கூத்தரும்
அடங்கியிருக்கின்றது.

20 JUN 1922

இஃது

தென்மாவை நகரம் ஷி எரியூர் சமம்
ஆபத்தரணப்பட்டி சங்கம குலம்
கடாக்ஷகவி மகா-ரா-ரா-ஸ்ரீ
மு. முத்துவயிரப் புலவரவர்கள்
இயற்றப்பெற்று

குன்றக்குடி R. மாரிமுத்துப் பண்டாரம்
அவர்களால்
மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்
இராம.

குருசாமிக் கோனர்
அவர்களது

மதுரை வடக்குமாசி வீதி
சந்திர விலாச அச்சியந்திரசாலையிற்
திப்பிக்கப்பெற்றது.

1922.

Q23:417
M22

Tam 59/84

உ

சிவமயம்.

ஸ்ரீ மலைமருந்தீஸ்வரர் துணை.

ஸ்ரீ மலைமருந்தீஸ்வரர்மீது

பதிகம்.

No. 20 JUN 1922

விநாயகர் துதி.

வெண்பா.

பொன்பரவும் ஏரிஞசர் பொற்புமருந் தீசன்மிசை
இன்பரசப் பாமாலை இசைக்கவே—அன்பருளங்
குடிகொண்டுவாழுங் கூரெற்றைக் கொம்பன்
கடிகமழும் பூந்தாளே காப்பு-

பதிமருவு திருவரசு மானேரி நகரவுழ்த
பருவதமீ தேயு கந்தம்
பகரிய மாமருந் தெனவண்ட மெங்கணும்
படர்ந்துலவு தேசுகொண்டும்
விதிசலச லோசனன் கந்திவிண் மூழுதாளி
விநாயகன் கௌரிநந்தன்
வித்தகன் வெஞ்சிலைச் செல்வனெடு பல்தேவர்
விளங்கிபணி கொண்டுநிற்பச்
சுதிபாவு நாரதன் இசையிடப் பரேந்தி
நாயபழ மறைசொற்றிடத்
தந்தமி முளங்கிட வரம்பையர்க ளடனமிட
சூரழகு கவரிவீச
மதில்கொடிக ளுருசெம்பொன் மணிநியம மிசைவளரு
மாட்சிபெரு சகளவடிவே
மதியிரவி வரக்கடதி மதிசகல வரமுதவு
மலைமருந் தீசமணியே.

1441

ஸ்ரீ மலைமருந்தீஸ்வரர் பதிகம்.

கல்கைபிலை கூவிளம் அருகரவு தும்பைமலர்
தனகிளர்ஞ் சடையணிந்தும்
கிருணை விழிகளும் பவளவா யின்சொலுங்
கெழுவுலவு சசிவதனமுஞ்
செங்கையிற் சூலடமருகமானு மழுவுமுன்
செயபுலித் தோலினுடையுந்
தேசவரு ஞேதயக் காந்தியு மாட்சியொளிர்
திருவுருவெண் ணீற்றினழகும்
பங்கயப் பாதச் சிலம்பொலி சொலித்திடப்
பலகோடி பக்தர்சூழப்
பலவிகும் வெள்விடையின் மீதேரி யடமையின்
பக்கல்வந் தருள்புரிவாய்
மங்கையுமை மகிழவரு நடனமிடு தாளனே
மரகதன்றெழு தோளனே
மதியிரவி வார்கடுதி மதிசகல வரமுதவு
மலைமருந் தீஸமணியே. 2

சடையாட நிலவாட ஒருமாது சிரமீது
தனிநடன மாடிநிற்கத்
தகைமைமிகு மகர குண்டலமாட வொளிர்மேனி
தானட வாடிடவே
உடையாட நூலாட டமருகமு மழுமானு
முடனுட வடமேருடன்
உலகாட பலகோடி யும்பர்முத லியயனு
முத்தமச் சித்தருட
இடைமேவு மாமனேன் மணியாட திடவீரி
னினிவான சதிருடிட
இசைபாட விடையாட நீமகிழ்ந் தாடியென்
னெதிர்வந்து னருள்புரிகுவாய்
மடையூடு புனலூடு மணிதரள நிரைகழனி
மாவேரி நகரமிசைவாழ்
மதியிரவி வார்கடுதி மதிசகல வரமுதவு
மலைமருந் தீஸமணியே. 3

பச்சைநகை வடிவழகி யச்சமுரு குழலழகி
பவளவித ளழகிவேதம்
படிமதுர மொழியழகி விழியழகி இந்து
பங்கயமொய்த்த வதனவழகி

கச்சைக் கிழித்துச் சராசர மயங்கிடக்
கனயோகி யானபாலன்
கண்பிசைந் தேயழக் கண்டுளா னத்தமுது
கருணையுட னூட்டுமழகி
இச்சையுன துயிரெனவு முரவுபுக முழகிநல
மிலகுமய மாகுமழகி
இடைவிடா துமையழகி பாகம துகந்தவந்
தெனையாள யிதுசமயமே
மச்சத்தி னுச்சித மகிழ்ச்சிதரு ஏரிநகர்
வாழ்விக்க வந்தமுதலே
மதியிரவி வரர்கடுதி மதிசகல வரமுதவு
மலைமருந் தீலமணியே. 4

அய்யோயிவ் வையமிசை நீயே னெனைப்படைத்
தவதிக்குளா ளாக்கினை
அறமோவுமக் கெமதுபழி சும்மா விடுமோவே
ருதாரமேது மூளதோ
செய்யாத வினையாது செய்தனே அல்லதுன்
றிருவடி மறந்ததுண்டோ
செகமீது வேறொருவ ரகமதிற் சென்றுயான்
றிருடனது யெவையுமாமா
கையுடன் வாயும்விழி மனதினுற் செய்குற்ற
கசடதனை நீக்கவருவாய்
கமலமுறை வேதனுங் கண்ணனுந் தேடரிய
கலிமுழுது நிறைபாதனே
மையுற்ற விநிமாதர் கணவரொடு புகழ்பரவு
மாவேரிநகர மிசைவாழ்
மதியிரவி வரர்கடுதி மதிசகல வரமுதவு
மலைமருந் தீலமணியே. 5

என்றே லெலும்புதசை மூலாவரு கறைநாம
பீரல்சுட லின்னுமற்றும்
இசையத்தி ரட்டியுட் கூடுண்ட தாக்கியதி
லிடைவிடாப் பாசமேற்றி
மின்போல் வெளிச்சமுற அறிவூட்டும் வாசியினை
மேற்ளே மாய்நடாத்தி
மேலுலவு சிகரநடு வீச்சகால் தட்டாரு
மிருதன்ப மின்பகம்பம்

பொன்போ லிலங்கிடக் கட்டியிற் றேரிணைப்
பூட்டியோட்டித் திரித்தும்
போட்டுவிட் டேநீயு மோடிடி லெனக்காரு
புகல்வேறுமுள தோசோலாய்
மன்பாரி லுனையன்றி யென்பாலி றங்குவரோ
மால்சத்தி மகிழ்காதனே
மதியிரவி வரக்கடுதி மதிசகல வரமுதவு
மல்லமருந் தீஸமணியே. 6

இரவுபக லறியாத மாய மோகத்திலு
லீலாகாமாலி சோகை
இற்றுவிழு குறைகுத்தம் விஷபாண்டு குட்டநீர்
இடிவாய்வு வெடிசூலையும்
புரடிவலி தலைக்குத்து வயற்றுளவு பயித்தியும்
புண்சிரங் கரையாப்புடன்
புளவைபுரை கண்ணிநோய் பொரிகிரந் திகள்கிரணி
பொங்கிவடி சூடுமுதலாம்
அரவபல விஷமுறும் பிணியகற்றியு மூந்தன்
அருளீந்து அடிமையெனோயான்
அதிவீர மறலிவிழ மிதிசெய்த பாதனே
அண்ணலே அமரரேரே
மரததம் பச்சைநவ மணிபாவு மேனிகர்
மாவவிழ்த்த திகிரிமிசைவாழ்
மதியிரவி வரக்கடுதி மதிசகல வாமுதவு
மல்லமருந் தீஸமணியே.

நீடாரு மிவ்வுலகி லென்போலு பாவியும்
நிறைமன்னர் தன்னிலுண்டோ
நிரைதீதி முறையிலாப் பாவி கல்லன்பர்தன்
நேசமரி பாதபாவி
ஏடாரு நற்றமிழி னிசையரிக் தோர்மொழி
எடுத்தரைக் காதபாவி
இட்டகட் டளைவிட்டு நட்டமர மாதரெடு
இச்சித்த கந்தபாவி

கூடாத பாவியாலுனு மென்னீ
கொண்டாதரித் தருளுவாய்
கோடானு கோடிமறை தேடித் துதித்திடும்
குஞ்சிதபதத் தழகனே

மாடமாளிகைவல்ல கூடமுக டண்டநிகழ்
மாவேரி நகரிலிலகும்
மதியிரவி வரர்கடுதி மதிசகல வரமுதவு
மலைமருந் தீஸமணியே 8

முதியவருரைத் தலும் மறையோலமுந் தந்தை
முன்குருக் கூறுமுறையும்
முன்னவன் நீயெனவு மவையுணர்ந் தவர்களை
முழுதவன் முனிவென
அதிபதியே பவனன்றி அணுமசை யாதென
அசைத்தனர்க ளதுகொண்டுயான்
அண்ணலே யுன்பெருமை சொல்லவல் லாரெவர்க
ளானதா லிங்குவந்தேன்
பதிமேவு சஞ்சீவி கிரிமீது வாழுமா
பரமனேயமரர் போற்றும்
பழமருந் தெனவிரிந் தண்டமுக டும்புகழ்
படைத்திட்ட சகளவடிவே
மதிசூடும் வரையன்மகள் மகிழ்நடன பாதனே
மாதவன் முழுநீதனே
மதியிரவி வரர்கடுதி மதிசகல வரமுதவு
மலைமருந் தீஸமணியே 9

சேலொற்ற விழிமாதராசைக் கடற்குளே
சித்தமுற மூங்கியாடித்
தினமதனபூசை கொண்டகமக மகிழ்ந்துபொன்
றேடியுண் டதுபோலாது
பாலொற்ற னன்மனத் தன்பர் பாதத்தைப்
பணிந்துருகி ஒருநேரமும்
பக்தியில்லாதமா பாவியானு கினும்
பழவினைகள் வினும்நீக்கி
வேலுற்ற பிள்ளையுங் கணநாதன் வித்தகன்
வேணமரர் புடைசூழவும்
விமலையிட பாகமதி லிலகவுந் திருநடன
விடையேறி வந்தனருள்தா
மாலுற்ற மடவியர்கள் கணவரொடு மகிழ்பரவு
மாவேரிபுரி யில்வளரும்
மதியிரவி வரர்கடுதி மதிசகல வரமுதவு
மலைமருந் தீஸமணியே 10

மூ னி ய ப் ப சு வா மி

ஆனந்தக் களிப்பு.

திருமருவு எரிநகர் வாழும் அவுத்த
திகிரிமிசை வளருமுனி நாதன் மீதென் ஞளும்
பொருள்பரவும் பாமாலே பாட மதம்
பொழியுமா தங்கமுகன் புனிதவருள் நாட 1

வண்ணம் பிறங்குவல தேகன் விண்
வரருறுபூ சுரர்பணிய வளர்ருஜ் யோகன்
அண்ணல்முனி யீசன்புகழ் பூணும் தமிழ்க்
காதிமருந் தீசர்திரு வருமுதவவேணும். 2

மோனகுரு பரனுயிலங்கும் எங்கள்
முத்தமுனி யாண்டிமிசை மணமேதுலங்கும்
ஆனந்தக் களிப்பதணிப்பாட சிவிவே
லாறுமுக முந்திதழ வருவாய் காப்பாட 3

தண்டலேசூ முவுழ்தகிரி மீதே வாழும்
சாமிமுனி யய்யன்புணை தமிழினுக்கிப்போதே
மண்டலத் துயிர்க்கினிய தாயே உமா
மகேஸ்வரி உனதுதயை நினமுதவு வாயே 4

நான் மறைக் காதியாயுகந்து வந்த
நாயகமே பாரதி என்னுமிசை யீருந்து
வான்பெருகு முனிநாதன் மீது இந்த
வண்ணத்தமிழ்ட் சொலநல் வாக்கருளிப்போது 5

மஞ்சுலவு நெடிய சஞ்சிவி வரையில்
வரதனென வாழுமுனி யப்பமேதாவி
கஞ்சமலற் செஞ்சரணம் போற்றி திருக்
கருணைபொழி யிமையழகு நாயகிதா ளேற்றி 6

செங்கமலக் கண்ணனயன் சரணம் நம்மள்
செய்யவடு கையன்கலுங்கையன்ருள் சரணம்
சங்குதவழ் கக்குளம் வாழ் நீதா உந்தன்
தண்டா மரைக்கழலே தருணமிது தாதா 7

மந்தைக் கருப்பரைவக் கனியாள் மாண்பு
மணிகோலி யாகாசக் காளிவான் புவிவாழ்
விந்தைமிகு தொண்டரைப் போற்றி என்றும்
விளங்கிவளர் இத்தியடித் தேசிகனே வாழ்த்தி 8

சான்றோர் வணங்கு மகாதாயன் திருத்
தங்கியொளிர் சந்தான கோபாலநேயன்
ஆன்றோரின் பதந்துதித்து நானே இந்த
ஆனந்தக் களிப்பை மகிழ் வாகப்பகர்வேனே . 9

குளந்தாபுரிக்கரசு புரக்கும் இந்தக்
குவலயத்தினிலதிக நலமேசுரக்கும்
வளந்திகழ் மல்லாகோட்டை நாடு போல
வானுலகுமீட்டல்ல வாய்ந்து புகழ்நீடு. 10

மாட்சிதிரு அரசுமானேரி நகர
வண்மையைக் கேளெனது மாதேமதிதேரி
நீட்சிபெர அண்டமுகடெட்டி வளர்ந்த
நிலைகாப்பிலனவரதம் படியுழுகில் கிட்டி. 11

மதிதவழும் மணிமாட வீதி யதினில்
வாழ்வார்க ளத்தணர்கள் நான்மறைகளோதி
அதிபதிகள் மனுமுறைப்படியே என்றும்
அரசுபுரிவார்வணிகர் நிரையுமப்படியே. 12

அயன்பதத் துதித்துளோரென்றும் மூவர்
அறையும்விதிமாறுது செய்குவார்தொண்டு
உயர்வகப் பலதருமம் நாட்டி தினம்
உகந்துவக்தோர்க்கீவர் அய்யன்வளர் நாட்டில் 13

திங்கள்மும் முறைமாரிசொரிந்து கங்கை
திரண்டோரிவாவி நதிகழுனியில் விரிந்து
தங்குநீரெங்கும் தாமரையும் மணம்
தருவல்லிசெங்கழுநீர் பலபுட்பமூறையும். 14

சங்கினந் தவழ்ந்தேதுலங்கும் உன்னஞ்
சத்துவத்துடன்மச்சங் குதிகொண்டிலங்கும்
மங்களஞ் சூழோரிவயலும் அதனில்
மருவிவளர் சென்னெலொடு கன்னலின்னியலும். 15

பெருமைசேர் சஞ்சீவிமேரு மீது
பெட்புடன் தோணுதென் அதிசயம் நீபாரு
தருவான கழுகுபலா தென்னை கத்தி
சந்தண மாமகில்கடம் பாத்தி புன்னை, 16

மன்றலுறை மல்லிகைபிச்சி மூல்லை
மருரோஜா சம்பங்கி மகிழமிருவாச்சி
கொன்றை சண்பகம்பாரி சாதம் இன்னும்
குலவுபூ ருகம்படரு கொடிமதி விநோதம் 17

மொக்கலர்ந் தண்டம்வரை யெட்டும் வாசம்
முகிலென்ன மாமதரம் மாறுது கொட்டும்
தக்கதெனச் சாரங்கமுண்டு பேடை
தன்னுடன் இசைகூடுஞ் சந்தோசங்கொண்டு 18

கந்தரம் மான்விலங்கெ தேஷ்டம் இக்கு
கர்ச்சித்துலாவும்பிடி போடுகொண்டாட்டம்
சந்தமா மயில்நடனமாடும் அதன்
சாயல்கண்டேகோகி லம்மிசை பாடும் 19

கனவரை நீடியமாகிரமும் வாய்ந்த
சுகனமணி வச்சிரத்தாலிழைத்த கோபுரமும்
தகதகென ஒளிரத்தனத் தானும் பதுமை
சாயல்தணப்பாரடி நேயமாய்த்தோனும் 20

தானவரு மானவருங் கூடி இவ்ய
தரளாதி மாட்சிருழ் சேங்கையில் நீராடி
தேனவுழு மருமலரெடுத்து நம்மள்
செய்யகிரீசன்முனி யய்யனுக்குத் தொடுத்து 21

பூணுவாரகராபரனே கங்கை
பொங்கரவு தங்களணி சங்காவரனே
தாணுவே சதாசிவா நமாவோம் சத்தி
தழுவிடும் யுயசசி தரனேநமாவோம் 22

எண்ணுதற் கெட்டாத வடிவே அண்ட
மெங்கும்வியாபித்திலகு துங்கமறை முடிவே
கண்ணுதலே எங்கள்வினை தீரும் உத்தன்
கதியுதவ யிதுதணங் கிருபைக்கண் பாரும் 23

எனவரதர் தினமும் பணிந்தேற்ற வாண
ரிசைகூடி பன்புகொண் டினியமறைசாற்ற
கனமூலவு பங்குனிமா மதியில் செங்
கதிர்நாளில் தொண்டரும் பாங்குடனிப்பதியில 24

தம்பட்ட மூரசுபேரிகையும் பம்பை
தவிலுடுக் கையுறுமி பலமேளவகையும்
பம்பமென எங்கணு முழங்க இங்கு
பலகோடிகாவடிகள் வந்துமே விளங்க 25

எண்ணரிய காணிக்கைகொண்டே முனி
பீசனேக்காணவே வருவார்திரண்டே
வண்ணமிகு மாலயனும்வேண்டி கிட்டா
வளர்மருகைக் கார்த்தவரதனிவன் தாண்டி 26

கருமுகிலே யொத்தசடையாண்டி கமலக்
கண்ணனுங்கொண்டாடு மண்ணலிவன்தாண்டி
குருவென வெவர்க்குமுகந் தாண்டி அன்பர்
குறையகல வரைமருவு குமரனிவன் தாண்டி 27

பாண்டிதேசப் பதியிலுண்டி உருமா
பழனறைக ளுளமுதவு பட்சமுருமாண்டி
ஆண்டியரன் தாண்டிமுனியாண்டி வையம்
மண்டரண்டந் தொழுவே கொண்டுவளர்த்தாண்டி 28

ஆதியிலே கயிலையுருப்பூண்டே வந்த
அந்தமுள நடுவாகி நின்றதிவன்மூண்டி
சோதியமாக நிறைந்தாண்டி பெருமை
சொல்லுவேன் கேளுமதி மானேநீவேண்டி 29

சுற்பிலருந்ததிங்கரும் பெண்ணே அய்யன்
கதியுதவு மெனவுனது மனதுதிடம்பண்ணே
அற்புதம் முனிநாதன்மகிமை சொல்வே
னன்புடன்கே டெனதுயின்ப ரசசுகமே 30

தருகாவன ரிடிசளாலே யிவன்
சடையாண்டி யானகதை சாற்றுவேன்மேலே
வேறுபேரில்லை நாம்சிவமே வினைகள்
விதமேது செய்தமோ அதுவே நற்றவமே 31

எனவுமவர்செருக் கடைந்திருக்க ஈசன்
இவையேதுபுதுமையென் றேசினம்பிறக்க
வனமேவினர் பிச்சைவாங்க தமது
வடிவமதி லிவர்க்கிடியில்லையென்றேங்க 32

பண்டாரமெதிர் வரவுகண்டார் சுரர்
பணிலாதேவேள்வி பெரிதாகக் கொண்டார்
தொண்டுபுரி பத்தரோயில்லை இனித்
துரிதமுட னிவர்கள்கெட வீளைவிப்போம்தொல்லை-

என்றுரிடி பத்தினிமுன்ஏக அமல
னெழிலழகு நோக்கிமன தேங்கியேஞெக
கன்றுசே தாதனைத்தேடி நாடிக்
கலந்திட்ட தொக்கவே மடவார்கள்கூடி 34

எனக்குனக்கென வவர்பாலோடக் கண்ட
இருடிகள் போகம்விட்டி தயமுகம்வாட
வனத்தையமெடுக்கவரும் ஆண்டி மாதர்
வளர்கற் பழித்திட்டா னின்றுமிகவேண்டி 35

பெண்மாய்க்கார னிவன்றன்னை இனிப்
பேதப்படுத்துவோ மெனமீசன் முன்னே
திண்ணமரி மழுசூலமேவ நாதன்
றிருக்கரத் திருத்தமுளி சேவகங்கூவ 36

அரியகரி வரிவரவுகண்டே அமலன்
அடுத்துக்கடித்தே விலங்குகளைக் கொன்றே
உரிதோலை யாடையாயுடுக்க அசுரர்
உக்ரமத்தோடி தனிகண மதைவிடுக்க 37

கதித்துயெதிர் முயலகனைமிதிக்க அதை
கண்ணுற்ற தேவர்ஜெயங்கூரியே துதிக்க
மதித்நிடா முப்புரத்தோர்மாள யோகி
மனமதனில் வெகுளிகொண்டக் கணமேமீள 38

திரிபுரத்தைச் சிரித்தெரித்தானே தொண்டர்
செய்யபணி கொண்டெங்கும் புகழ்தரித்தானே
அரியயன் இந்திராதிவணங்க இந்த
அவழ்தகிரி மருவிஞ னன்பர்களிணங்க 39

அதிரூபதன பாரமானே அண்ணல்
அருளுதவு மெனவுனது மனதிலுருத்தேனே
சுதிக்பான பரதவித்தம்பாடு இன்னும்
சொற்றிடுவே னிவன்மாட்சி கேட்கமதிகாடு 40

பண்டோருகா லுலகுயிரைத்தேடா யோகம்
பரனிருக்கவேயண்டரித யமதுபாடாய்
கண்டுகந்தர்ப்பணை யழைத்து அரன்
கருத்தரிதல்வேண்டுமென அவனுங்கெர்வித்து 41

பிள்ளைமதி வதனமதுகந்தான் சிலை
பிறங்குமலர்நாணைய வீரியமீந்தான்
கிள்ளைமீதேறியவன் சீறி தவம்
கெடுத்தரணைவிடுத்திவிடுவே னின்றுமதிதேரி 42

மதிவதனரதியெனது மயிலே சிவனை
மனதுகெடவேசெய்து வருவேன்பார்லயிலே
புதினமிது ஏதுலகிலென்று மதம்
பூரித்தகாமன்முன் மனைசொல்வாள்நின்று 43

ஏகநாயகனந்த இறையே அவனுக்
கிடர்புரியுன்செல்வ முடலுயிருங்குறையே
போகவொண்ணுது என்மன்னு என்று
புகலுரதிமொழிதள்ளிச் சென்றனேயன்னள் 44

ஆனந்தக் களிப்பு:

குறும்புமதன் கரும்புவில்லெடுத்தான் கோபங்
கொண்டுகங்காதரன்முன் னின்றுகெடுத்தான்
அரும்புமலர்ப் பாணமைந்தெடுத்தான் இரு
அகிலவான்மாமருள சரமாரிவிடுத்தான் 45

மாருது மதன்கணைகளேவ முனிந்து
மழுவாளிறுதல்வ்ழி நிறக்கவுளத்தாவ
நீருகக்காமனு மெரிந்தான் அண்டர்
நிலையுறவேபாண்டரங்கன் கருணைக்கண்திறந்தான் 46

அரன்கோபமடங்கி வரையிருக்க அதனை
அரிக்துநிவணங்யேதன் மனக்ரவலிபெருக்க
நிரந்தரா யெனதருருர்தா எந்தன்
நேசனுயிர்பெற்றிலை வரமுதவுதா 47

என்றழுதவங்கணையைப் பார்த்தான் அவளுக்
கிசைமதனைச் சொருபமுற ரதிமகிழச்சேர்த்தான்
அன்றமார்தொழவருள் சுரந்தான் இந்த
அரியசஞ்சீவிவரை கூடியேவளர்ந்தான் 48

சுந்தரமிலங்கு முகத்தாளே அய்யன்
தூயதிருவிளையாடல் சொல்வேனீகேளே
மூந்தமிரு கண்டனுதன்தான் தந்தை
மொழிகொண்டு சங்கரனைவழிதெகண்டுசெய்தான் 49

வண்டரைத் தண்டமிடுசூலன் பாலன்
வயதுசரி யெனக்கண்டு வந்தானேகாலன்
திண்டிறற்சண்டன் வரப்பார்த்தான் சிறுவன்
சீறியழவதனையரன் தன்மனதி லார்த்தான் 50

மார்க்கண்டாபயம் வேண்டாமின்றே வந்த
மறலிபட வீழ்த்துவேன் மகிழடைநீயென்றே
ஆக்ரமித்துச் சினந்தெழுந்தானே கரத
னண்டமிடியக் கோபங்கொண்டு வளர்ந்தானே 51

வாதாடுசண்டா வந்தனையே இன்று
மடியஉதைப்பேனிக்த மண்ணின்மிசை நீனையே
ஏதடாஏமனை யிவ்வாது என்று
எடுத்துமிதித் தான்பதத்தா லவன்சிரத்தின்மீது 52

அன்றுகாலனை வென்றுசிரந்தான் அன்பன்
அழியாதநிலைபெரவே அருளதுசுரந்தான்
இன்றுமிவன்கதை கேளுமயிலே எனக்
கிசைந்தவாக்குயிலே இன்பரசவொயிலே 53

மருளாதே திருவணையமாதே தேவன்
வரமேதருவானிக்த மாநிலத்தின்மீதே
அருளானதிரு வாலங்காட்டில் புலியூ
ரரவுபணியவேயிக்த அய்யர்வளர்நாட்டில் 54

ஆண்டிச்சிதன்னே டெதிர்நின்று பெரிய
ஆட்டைஎத்தேதணிர் தம்பலத்திற்சென்று
தாண்டியவ ளாடியவனுட நடந்த
சங்கையுரைப் பேரானேயிங்கிதமேகூட 55

விரித்தசடை யாடமதியாட கங்கை
விரைகமல நயனமொளிர் வெண்முருவலாட
தரித்தபுலி யாடைகரமாட அதிற்
சரிகடககங்கணம் நெறியேதிகழ்ந்தாட 56

பருத்தபவளத் தேகமாட புயப்
பணியாடத்திரிசூல மழுமரியுமாட
உரித்தகரியுடை சிந்தாட பூண்ட
ஊகங்கணமாட உளமுமகிழ்ந்தாட 57

சாலனி யுதைத்த தாளாட அதிற்
கண்டசிலம்புடன் தண்டைகொலுசு நின்றாட
ஆலமுண்ட கண்டந்திழ்ந் தாட எங்கும்
அணிவெண்ணீ றகமுழுதும்நிறைந்துகொண்டாட 58

மாலயனு மிந்திரனு மாட அதி
மகிழ்ச்சியொடு கணநாத மாகுருவும் ஆட
வேலுமயிலுஞ் சேவலாட முருகன்
விந்தைபெரு தந்தைபதம் வேண்டிநின்றாட. 59

ஆதவன் மதிவருண நாட வளர்
அஷ்ட்ட பாலகர்சித்தி வித்தியாதரர்க ளாட
பூதநாதன் வடகுடை செயம்
புனைவீரபத்திரன் புகழ்ந்துநி ன்றாட 60

பதஞ்சலி வியாக்ர மர்களாட பணியும்
பண்ணவர் கன்முப்பத்து மூக்கோடியாட
இதகீத நாரதரு மாட அன்ப
ரிங்கிதக்கவிபாட இசையனந்த னாட. 61

பூமகளு மாமகளு மாட பருத்த
பொற்பு பதினொன்குலகு அற்புத மாயாட
நேமமாய் பணியன்ப ரூட நீதி
நெறியுறையும் மறையாட திரைபறையு மாட 62

சுந்தரிகௌரி நீலாட்சி எளிழ்
சூட்சி மீனாட்சி காமாட்சி தேனாட்சி
அந்தரி யாமளை வாமி உமை
அபிராமி சிவகாமி அம்மைமதன் மாமி 63

திடமுற்ற மயிடசம்மாரி வளர்
தேவரீருடு மூவர்க்குபகாரி செயவீரி
வடபத்திர காளியெத்தாட அதிக
வண்மையுள தேவரிதை யுண்மையாப்க் கொண்டாட

கிஞ்சுகமாது குளிர்ந்தாட மூர்த்தி
கெடிகொண்டு ஒருபதப்படி கின்றாட
குஞ்சிதப்பதமதனைத் தூக்கி அணிந்த
குழையுரவே பூட்டினனும் பர்க்கருள் தேக்கி 65

சிவமிதைச் செயத்தேவர் புகழ்ந்தார் எங்கும்
செயவீரியிது சபாசெனவே மகிழ்ந்தான்
அவமெலாம் நீக்கியிங்கு வந்தே வளர்
அண்ணல்முனி நாதன் கொலுவிருப்புஞ் சிரந்தே. 66

துங்கமுடன் தோணுமிதைப் பாரு கம்மள்
துயர்கெடவே நயமுதவும் படிஅன்புகேரு
செங்கமல மலர்ப்பாதத் தழகும் அணிந்த
சிதம்புமா தண்டையொலி யெளுங்கொலுசின்குமுகும்

காயாசச் சல்லத் துடையும் அதனிற்
கச்சைமணி அரைஞாளு மெச்சுமுருக்கிடையும்
ஓயாத தருக்காத்திலணியும் சுடர்
உலவிடும்கனக கங்கணவளைகள் பணியும் 68

கணையாழி விரல்மீதி லங்க தேக
காந்தியருணோதயம் போலவே துலங்க
இணையிலாத் திருப்புயந் தனிலே தேசு
எழில்ரத்ன பூமணி ருத்ரூக்க மாலை 69

சந்திர வதனனுதல் விளங்க உடலிற்
தரித்தபூதியும் வாசச் சாந்துமே பிறங்க
கந்தமலரணிந்த சடை முடியும் கருணைக்
கண்ணுமதி மன்னபணி திண்ணமுயர் கெடியும். 70

சூலம்வேல் கட்டாரி அரிவாள் பீட்டி
சுக்குமாந்தடி வளரிபட்டா கெடும் பெருவாள்
கோலவடி வழகன் முனிநாதன் பெருமை
கூறுமடியார் வினைதீர்க்குங் குணநீதன் 71

பாதகமலம் போற்று வாயே அமலன்
பக்கலுற்றே வேணவரமே கேட்பாயே
போதனமக் கருளும் புரிவானே என்மம்
புகலரும் மங்கைமன மகிழ்ந்து கனவானே. 72

இனியமருந் தீசன்முனி நாதன் புகழை
எடுத்துரைத்தீர் நீரேதமிழ்க்கதி விநோதன்
கனியுலவு தருசூழிவ் வரையும் இங்கு
கண்ணுற்ற தென்னவக்காரணமே யுரையும். 73

என்னமகிழ்ந் தெனக்குரிய மானே நா
னியப்புவேனிம் மேருவந்த வித்தாயனே
மன்னவன் தசரத குமாரன் அன்னை
வாய்மைவழுவாது வனஞ் சென்றனே வீரன். 74

ரமனும் முன்னே நடக்க சீதை
லட்சுமணனுந் துட்டர்த் தவ்வழிகடக்க
மாமருவும் பஞ்சவடி கண்டு தங்கி
வாழ்வதை யரிந்துரை வேஸ்பரன் அன்று. 75

சானகியைத் திருடியே லங்கை வேந்தன்
சார்ந்திடவே ரகுபதி தம்பியுட னிங்கே
மானிய மைதலியைத் தேடி அனு
மந்தன் சுக்ரீவனொடு உறவு கொண்டாடி. 76

ஆஞ்சநேயன் லங்கைக் கேகி அந்த
அசோகவன முற்றேவ ருந்திடும் வைதேகி
வாஞ்சையை ராகவனுக் குரைக்க ராமன்
வானரப்படையுடன் லங்கையை நிறைக்க 77

கண்டசுரன் சேனைதிரண் டெதிர்க்க அதைக்
காருத்தன் படையும்போர் கொண்டுயிர் செருக்க
வண்டனிந் திரசித்து வெருண்டான் லடசு
மணன்சிரைபதாதிகளே வென்று செயம் கொண்டான்

தம்பிதளம் நிலமைய றிந்தான் இராமன்
றனகவலையைச் சாம்பு வந்தனுந் தெரிந்தான்
கம்பிர மாருதிநீர் சென்று இக்
கணமேரு வரையிலுயர் சஞ்சீவி கொண்டு. 79

மாவிரைவில் வந்தால்நம் சேனை யாவும்
வாழும் நீடிளியென அனும னெழுந்தானே

தாவியே அச்சயிலம் பார்த்தான் மேரு
தாணுவின் அடியோடு சாம்புவன்முன் சேர்த்தான் 80

அரியமருந் தாற்தாணை சிறக்க பொற்பை
அவ்விடமே சேருமென வவன்மலை பொருக்க
தரிதமுடனவீசி எறிந்தானே சிறு
தண்டொன்று இங்குவிழ அனுமனரிந்தானே. 81

குன்றின்மிசை வளர்வடிவு கண்டான் அரன்
குறியென்று பூசித்து வேண அருள் கொண்டான்
அன்று முனிகாதலியே பாத கார்க்க
அனுமதி கொடுத்தேகி னனனும சாது. 82

எக்காலுஞ் சஞ்சீவி வரையே மருந்
தீசனபணி கொண்டுவாழ் முனியப்ப துரையை
மூக்கால முணர்ப்பத்தர் கூடி இந்த
முன்னவனையும் போற்றி செவ்வாரே தேடி 83

நித்தியப்படிக் குயரும் பண்ணை மன்னர்
நியமித்தார் சங்கமாய் கேளடி என் கண்ணே
உத்திரத் திருவிளாக் காட்சி இவ்
வுலகினிலிதற்கு நிகருண்டோமா மாட்சி. 84

நாட்டாரை தேஷ்ட்டமாய்த் திரண்டு மலை
நாதனைச் சந்தர சேகர னெனக்கொண்டு
சூட்டுமணி இரதமிசை வைத்து அய்யன்
தூணைவரையும் வாகனதியில் நிரைத்து. 85

எங்களுந் தீபிகை விளங்க கட
லிடியென்னப் பலமேளவாத்திய முழங்க
மங்களமாய் நகரைவலம் வருவார் அன்பர்
மனமகிழ மருந்தீசன் வேணவருள் புரிவார். 86

சங்கமாய்க் காவடி எடுத்து இந்தச்
சயிலமதுசுற்றி யிச்சன்னதி நிறைத்து
பொங்கமாய் அபிசேகம் செய்வார் அய்யன்
பொற்கமலம் போற்றியே மதிமகிழ்ந் துய்வார் 87

பருவதியே வளரு மதியே எந்தன்
பாக்கியமே யோக்கியசி லாக்கிய மாநிதியே
குருவடிவ முனிநாத சுவாமி நம்மள்
கூரும்பாமாலையணி கொண்டபுயநேமி. 88

சித்திரா பத்திரகாளி பாலன் வளர்
சேயமுத்து வயிரக்கல்பு தேக்கிடுசீலன்
நத்தினையும் புகழ்கொண்ட மூர்த்தி தாளே
என்றுந்துதித்து நாம்வாழ்த்த வெகு நேர்த்தி 89

புலத்தோர் நாளும் வாழி அன்பு
புரிபதத் தித்தர்தன் பொற்பாதம் வாழி
மாதவன் திருவடியும் வாழி மலை
மருந்திசன் பாதகமலங்களும் வாழி. 90

இனியகுண முனிநாதன் வாழி நாளும்
எனையாளுங் காளிபதந் துணையாக வாழி
கனமுயரு கவிஞர்தாள் வாழி பரத
கண்டநிரை தொண்டர் பதம் என்றும் நல வாழி. 91

மலர்மாது வளர்மல்லை கோட்டை நாட்டில்
வாழ்வுபெறு செயபதிக ளென்னளுமிக வாழி
நலமுலவும் ஏரிநகர் வர்ழி சேங்கை
நதிஊருமணியாறு நான்மறைகள் வாழி. 92

பாடியிதைக் கேட்போர்கள் வாழி குன்றைப்
பதிவளருமாரிமுத்துபச்சிமான் வாழி
நாடியேமுனியீசன் அருளால் இந்த
நற்றமிழு வாழிசுக நலம் வாழி வாழி. 93

ஆனந்தக் களிப்பு

முற்றிற்று.

புஸ்தகம் வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

மு. காளிதாஸ்,

ஆபத்தாரணப்பட்டி

திருக்கோஷ்டியூர் போஸ்டு

இராமனுதபுரம் ஜில்லா.